1990 ஏப்ரல் 26 *[டாக்டர் மு. கருணாநிதி]*

போராட்டம் நடைபெற்ற காரணத்தாலே இத்தகைய அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கின்றன. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அழகர்சாமி அவர்களும், திருமதி ரமணி நல்லதம்பி அவர்களும் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களை மனதிலே கொண்டு, மேலும் அங்கே அமைதி நிலவவும், அந்த ஓட்டுநர் சங்கம் கோருகின்ற உரிமை நியாய மானதாக இருந்தால் அதைக் கவனிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர வர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து விவா திக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படு கிறது.

4. கவன ஈர்ப்பு.

(அ) காஷ்மீரில் உள்ள ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியில் பயிலும் தமிழ்நாட்டு மாணவர்கள் படிப்பைத் தொடர முடியாமல் திரும்பி வந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் மற்றும் எம். இராமச்சந்திரன் ஆகி யோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள் ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''காஷ்மீரில் உள்ள ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர் கள், தற்போது அங்கு நிலவும் சம்பவங்களினால் படிப்பைத் தொடர முடியாமல் தமிழ்நாட்டுக்குத் திரும்ப வந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நமது நாட்டில் 17 வட்டார பொறியியல் கல்லூரிகள் உள்ளன. ஸ்ரீநகரில் உள்ள இக்கல்லூரி 1960-ல் ஆரம்பிக்கப் பட்டது. இக்கல்லூரி அம்மாநிலத்தில் நிலவிவரும் கிளர்ச்சியின் காரணமாக தற்போது மூடப்பட்டுள்ளது. பொதுவாக வட்டார பொறியியல் கல்லூரிகளில் உள்ள இடங்களில் பாதி அந்தந்த மாநிலங்களாலும், மீதம் உள்ள இடங்கள் பிற

மாநிலத்தை சார்ந்தவர்களுக்கு மைய அரசினாலும் பிரித்து அளிக்கப்படுகிறது. இக்கல்லூரியில் சுமார் 50 தமிழ் மாணவர்கள் பயின்று வரக்கூடும். இவர்களில் சிலர் தொழிற் கல்வி இயக்குநரை நேரடியாக சந்தித்து தங்களையும் அந்த மாநிலத்தின் சூழ்நிலையைக் கருதி, இம்மாநிலத்தில் திருச்சியில் உள்ள பொறியியல் கல்லூரிக்கு இடமாற்றம் செய்து தருமாறு கோரினார்கள். இம் மாணவர்களுக்கு மைய அரசு இட ஒதுக்கீட்டின் கீழ் இடமளிக்கப்பட்டதால் இக்கோரிக்கை மைய அரசின் வழியாக வர வேண்டும் என அவர்களிடம் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு அசாதாரண நிகழ்ச்சி என்பதாலும், ஸ்ரீநகரில் உள்ள வட்டார பொறியியல்கல்லூரி ஜனவரி 1990 முதல் வகுப்புகள் நடத்தவில்லை என்பதாலும் இம் மாணவர்களின் கோரிக்கை தொடர்பாக மைய அரசிடமிருந்து கருத்துரு பெறப்பட்டால், அவர்களுக்கு 1990–91 கல்வி யாண்டு முதல் இடமளிப்பது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர திட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலை நான் கவனித்தபோது, காஷ்மீர் நிலவரம் தீர்ந்தபாடில்லை. தீரும் என்ற நிலையும் இல்லை. கிட்டத்தட்ட 33 மாணவர்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், பலவிதமான செமஸ்டர் படிப்பு களில் ஈடுபட்டு படித்துக்கொண்டிருந்த மாணவர்களுடைய நிலை இன்று தர்மசங்கடமாக இருக்கிறது. அங்கே ஏற்பட்ட சம்பவங்களினால் ரிஜினல் இன்ஜினியரிங் காலேஜ் மூடப்பட்ட உடனே, தமிழ்நாட்டு மாணவர்கள் படிப்பைத் தொடர முடி யாமல் திரும்பி வந்துள்ளார்கள். எல்லா ஸ்டேட் மாண வர்களும் அங்கே படிக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட் டைச் சேர்ந்த மாணவர்களைப் பொறுத்துத்தான் நம் முடைய கவலை. மற்ற மாநில மாணவர்களுக்கு ஆங்காங்கே இடம் கொடுத்திருக்கிறார்கள். குறைந்த எண்ணிக்கை யுள்ள இந்த 33 மாணவர்கள் மத்திய அரசின் உதவியினால் தான் அங்கே சேர்ந்தார்கள். அவர்களை மறுபடியும் வேறு இன்ஜீனியரிங் கல்லூரிகளில் சேர்க்க தொடர்பு கொண்டிருக் கிறோம் என்று சொல்லும்போது, காலம் கடந்து கொண் டிருக்கிறது. பல செமஸ்டர் படிப்பு அவர்களுக்கு வீணாகிக் கொண்டிருக்கிறது. அதையெல்லாம் கருத்தில் கொண்டு நம்முடைய கல்லூரிகளிலோ அல்லது வேறு ரீஜினல் இன்ஜி னியரிங் கல்லூரிகளிலோ அவர்களை சேர்க்க ஆவன செய்யு மாறு வேண்டுகிறேன்.

11-30 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஷ்மீரில் ஏற்பட்ட பல்வேறு விதமான குழப்பங்கள் காரணமாக அங்குள்ள வட்டாரப் பொறி

யியல் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து அங்கே படிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு இருப்பதை இந்த அரசு அறியும். அந்த மாணவர்களுடைய விண்ணப்பத்தை இங்கே ஏற்க வேண்டுமானால் அதுவும் வட்டாரப் பொறியியல் கல்லூரியிலே அவர்களைச் சேர்க்க வேண்டுமானால் மத்திய அரசு ஜம்முவிலுள்ள காஷ்மீர் வட்டாரப் பொறியியல் கல்லூரியில் உள்ள அந்த மாணவர்களுக்கு இங்கே இடம் தரலாம் என்று தெரிவிக்க வேண்டும். அது ஒரு சாதாரண குறிப்புத்தான். அந்தக் குறிப்பை அவர்கள் அனுப்பினால் அவர்களுடைய உடன்பாட்டோடு அந்த மாணவர்களை இங்கே சேர்க்க முடியும். அது பற்றி அந்த மாணவர்களிடத்திலே தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மிக விரைவிலே கிடைக்கக் கூடும். இது ஏறத்தாழ விடுமுறைக் காலம். எனவே கல்லூரி துவங்குகிறபோது அந்த மாணவர்கள் உரிய வகுப்பிலே இடம் பெறத்தக்க அளவுக்கு வாய்ப்புகளை உருவாக்கலாம் என்று நான் நம்புகிறேன்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதியாக இருந்த காஷ்மீரம் இப்போது அமைதிக்குப் பங்கமான நிலையில் இருக்கிறது. பஞ்சாபிலே திருச்சியைச் சேர்ந்த ஒரு மாணவர் இந்தமாதிரி ஒரு சூழ்நிலையிலே கல்லூரியில் இருக்கிறபோது இறந்து விட்டார். அது போல, மாணவர்களை கல்லூரியிலே படிக்க வைக்கிறபோது அவர்களுடைய கவலை தான் பெற்றோர்களுக்கு இருக்கிறது. அந்த வகையிலே அங்கு 33 மாணவர்கள் தான் இருக்கிறார்கள். இந்த அறிக்கையில் கூட அந்த மாணவர்களின் மனுக்களைப் பெற்று மத்திய அரசிலிருந்து அறிவிப்பை எதிர்பார்ப்பதாக இருக்கிறது. நம்முடைய அரசாங்கமே அதற்காக எழுதி இந்த மாணவர்களுடைய நிலைமை இப்போது மோசமாக இருப்பதற்குக் காரணம்—கல்வி கற்று தேர்வு எழுதுகிற காலம் இது. இப்போது தேர்வு எழுதுகிற காலத்திலே அவர்கள் கல்லூரிக்குச் செல்ல முடியாத நிலை இருக்கின்ற காரணத்தினால் — அந்த 33 மாணவர்களும், ஒவ்வொரு வகுப்பிலே ஒவ்வொரு ஆண்டிலே குறைவாகத் தான் இருப்பார்கள்; 12 பேர், 13 பேர் தான் இருப்பார்கள். ஆகவே அந்தக் குறைவான மாணவர்கள் இருக்கிற காரணத்தால் நம்முடைய அரசே மத்திய அரசுக்கு எழுதி இங்கு திருச்சியிலே வட்டாரப் பொறியியல் கல்லூரியிலே படிப்பதற்கு வழிவகை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அமைச்சரவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே ஒன்றும் பெரிய கருத்து வேறுபாடு இல்லை. அவர்கள் வட்டாரப் பொறியியல் கல்லூரியிலே படிப்பவர்கள் என்ற முறையிலே, வட்டாரப் பொறியியல் கல்லூரியிலேயே சேர்க்கப்படுவது தான் முறை; பாடத் திட்டம் முதலானவற்றில் ஒரே முறையான பாடத் திட்டத்திலே இடம் பெற முடியும்.

ஆனால் மத்திய அரசின் பொறுப்பும் வட்டார பொறியியல் கல்லூரிக்கு இருக்கிறது. எனவே திருச்சியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி தமிழக அரசால் மட்டும் நடத்தப்படுவதல்ல; மத்திய அரசினுடைய பிரதிநிதியும் அங்கு இருக்கிறார். அந்த மத்திய அரசுக்கு காஷ்மீரிலுள்ள அந்தக் கல்லூரி மூடப்படுகிற நிலைமை இருப்பது தெரியாமல் இருக்க முடியாது. எனவே ஒரு கல்லூரியிலிருந்து இன்னொரு கல்லூரிக்கு மாறுவதற்கு மத்திய அரசினுடைய அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் மிக விரைவாக நமக்குத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. ஏனென்றால் இதிலே முதல் பொறுப்பு மத்திய அரசுக்குத்தான். அந்தக் கடமை அவர்கள் மூலமாக நிறைவேறுவதற்கு மாணவர்களுடைய வேண்டுகோளும் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கும் என்று கருதுகிறேன்.

(ஆ) என்.ஆர்.ஈ.பி.மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி.) திட்டங்கள் பேரூராட்சிகளுக்கு விரிவுப்படுத்தப்படாதது குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ''என்.ஆர்.ஈ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற 'தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம்' கிராம ஊராட்சி மன்றங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு, பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

நடப்பாண்டு முதல் பேரூராட்சிகளிலும் தொகுப்பு வீடுகள் கட்டப்படும் இத்திட்டம் அமல்படுத்தப்படும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அறிக்கையைத் தந்து இருக்கிறார்கள். துறையின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இதுவரை அரசின் ஆணை பிறப்பிக்கப்படாத காரணத்தால் இந்த நடப்பு ஆண்டில் இந்த திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே விரைவாக அரசு ஆணை பிறப்பிப்பதற்கு முயற்சி செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS